**நியாகம பிரதேச சபை**
**காலி மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 ஏப்ரல் 06 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2020 ஜுன் 22 ஆந் திகதியும், விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2020 ஜுன் 30 திகதியும் சபை முதல்வருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து நியாகம பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### 1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது காணி மற்றும் கட்டடங்களை அபிவிருத்தி செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவு ரூபா 1,503,338 தொகையினை மூலதனப்படுத்தியிருக்கவில்லை. | சரியான எண்ணிக்கைகள் கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 ஆண்டின் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | 2019 ஆண்டின் போது கொள்வனவு செய்திருந்த இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களின் பெறுமதி ரூபா 31,433 தொகை மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியான மீதிகள் கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 ஆண்டின் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (இ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு இயந்திரங்கள் இயந்திர உபகரணங்கள் மீதியுள் ரூபா 324,541 தொகைக்கான நிலையான சொத்துக்கள் அல்லாத விடயம் ஒன்றின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 ஆண்டின் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | சபையின் 15 உத்தியோகத்தரிடம் அறவிடப்பட்ட ஊழியர் பிணை வைப்பு ரூபா 70,500 தொகையினை கணக்கீடு செய்திருக்கவில்லை. | ஊழியர் பிணை வைப்பினை சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | 2020 ஆண்டின் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (உ) | புத்தாண்டு கொண்டாட்டத்திற்காக மேற்கொள் ளப்பட்ட வருவாய்ச் செலவு ரூபா 49,673 தொகை மூலதனச் செலவு என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 ஆண்டின் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள 03 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய துணைப் பதிவேடுகள்/ அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளி டையே ரூபா 5,835,675 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | குறிப்பிட்ட மீதிகளின் வித்தியாசங்களை இணக்கஞ் செய்து கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நீண்ட காலமாக காணப்படும் இணக்கமின்மை என்பதனால் எதிர்காலத்தில் சரி செய்ய நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | மூலதனச் செலவீட்டுக்கான அரசிறை உதவு தொகை கணக்கு மீதி மற்றும் நிலையான சொத்துக்கள் கணக்கு மீதிகளுக்கிடையே ரூபா 38,678 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | கணக்குகளை இணக்கஞ் செய்து சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | 2020 ஆண்டின் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

#### (அ) பெறவேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நீண்ட காலம் முதல் அறவிடப்படாமல் காணப்படும் ரூபா 5,121,192 இற்கான கடன்பட்டோர் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பெறவேண்டிய கணக்கு மீதியை அறவீடு செய்ய வேண்டும். | நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

(ஆ) செலுத்தவேண்டிய கணக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கடந்த ஆண்டுகள் தொடர்பான ரூபா 13,645,590 இற்கான கடன்கொடுத்தோர் மீதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளை தீர்ப்பேன். |

**1.3.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

**தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 144,685,876 தொகைக்கான 08 கணக்கு விடயங்கள் தொடர்பான தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப் படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**1.4 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மான ங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி | | | |
| (i) விதி 33 | வீதவரி செலுத்துவதை புறக் கணித்துள்ள நபர்கள் தொடர் பான அட்டவணைகள் மற்றும் ஆதனங்களை தடை செய்யும் எழுத்தாணை அட்டவணை தயாரித்திருக்கவில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் எழுத்தாணை வழங்கப்பட்டு, நிலுவை வருமானத்தை அறவீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| | (ii) விதி 193 | பாதீட்டுடன் வரவு மற்றும் செலவு விடயங்களை இணக்கஞ் செய்து மிகைகள் மற்றும் பற்றாக்குறைக்கான காரணங்களைக் காட்டும் கூற்றொன்று தயாரித்திருக்கவில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் அவ்வாறான கூற்றொன்று சமர்பிக்கின்றேன். |
| | (iii) விதி 218 | சபைக்குச் சொந்தமான காணிகள் வருடாந்தம் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் குறிப்பிட்டவாறு செயற்படுவேன். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணங்கள்<br>------------------------------------------------ | | | |
| | நிதிப் பிரமாணம் 571 | 02 வருடத்தை மிகைத்துள்ள ரூபா 10,978,734 தொகைக்கான வைப்பு மீதி ஒன்று தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்களின் படி செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் காலங் கடந்த வைப்புக்களை வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (இ) | பொது நிருவாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு செயலாளரின் 2016 திசெம்பர் 26 திகதிய 30/2016 இலக்க சுற்றறிக்கை | சபை 10 வாகனங்களின் எரிபொருள் எரிவு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | சுற்றறிக்கையின் பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பேன். |

## 2 நிதி மீளாய்வு
----------------------

### 2.1 நிதி விளைவுகள்
---------------------------

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 6,544,603 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 4,435,277 தொகை ஆகக் காணப்பட்டது.

**2.2 நிதிக் கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 மற்றும் 2018 ஆண்டுகளின் போது முறையே காணப்பட்ட ரூபா 27,450,427 தொகை மற்றும் ரூபா 7,470,678 ற்கான திரண்ட நிதியக் கணக்கின் வரவு மீதி மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 7,384,375 தொகையாக காணப்பட்டது. இதன் பிரகாரம் திரண்ட நிதியக் கணக்கில் வரவு மீதிகள் காணப்படல் சிறந்த நிதியக் கட்டுப்பாட்டின் அடையாளம் ஒன்றல்ல. | செயற்படு மூதலனத்தை அபிவிருத்தி செய்து, திரண்ட நிதியத்தை சிறப்பாக்கி வைக்க வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**2.3 வருமான நிருவாகம்**

**2.3.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதி யில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்க ப்பட்ட வருமானம | திசெம்பர் 31 திகதி யில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 901,603 | 653,613 | 689,213 | 340,334 | 1,419,850 | 1,461,880 | 1,746,829 | 375,934 |
| வாடகை | 4,167,056 | 4,590,297 | 3,881,070 | 1,130,970 | 5,690,850 | 4,620,375 | 4,969,716 | 402,274 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 314,026 | 270,334 | 279,084 | - | 310,625 | 419,286 | 421,411 | - |
| மொத்தம் | 5,382,685 | 5,514,244 | 4,849,367 | 1,471,304 | 7,421,325 | 6,501,541 | 7,137,956 | 778,208 |

### 2.3.2 நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 2,722,718 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 5,748,014 தொகை ஆகும். | நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டண வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | அறவிடப்பட வேண்டிய தொகையை வழங்குமாறு பிரதான செயலாளருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் மீதான கருமங்களை முறைப்படுத்தலும் கட்டுப்படுத்துதலும் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை, வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

#### (அ) செயல் நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| விதிக்கப்பட்ட துணை விதிகளின் படி சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகள் தொடர்பாக வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

#### (ஆ) திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| குப்பை முகாமைத்துவம் தொடர்பாக முறையான நீண்ட காலத் திட்டமொன்று சபையிடம் காணப்படவில்லை. | குப்பை அகற்றுவது தொடர்பாக முறையான மற்றும் நீண்ட காலத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | அரச காணி ஒன்று பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை எடுப்பதுடன், நீண்ட கால வேலைத்திட்டம் ஒன்று தயாரிக்கின்றேன். |

**(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
| --- | --- | --- |
| நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரலில், நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்காக உலகலாவிய சுட்டிகளின் மூலம் சபையின் அதிகாரப் பிரதேசத்திலுள்ள பொது மக்களின் வாழ்க்கை தரம் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்ட காலத் திட்டங்கள் சபையினால் தயாரித்திருக்க வில்லை. | நிலைபேறான அபிவிருத்திக்கான நீண்ட காலத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு பொதுமக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த வேண்டும். | அதிகாரப் பிரதேசத்தின் பொதுமக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு எதிர்காலத்தில் திட்டம் ஒன்று தயாரிக்கின்றேன். |

## 3.2 முகாமைத்துவ திறமையின்மை

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
| --- | --- | --- |
| (அ) வீதி விளக்குகள் பராமரிப்புக்காக மின்சார சபையுடன் வருடாந்தம் உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்படாமையால் வீதி விளக்குகள் பராமரிப்புக்காக பெற்றுக்கொள்ளக்கூடிய பராமரிப்புச் செலவை அறவீடு செய்ய முடியாமல் உள்ளது. | பராமரிப்பு அலுவல்கள் மேற்கொள்வதற்கும் மற்றும் பராமரிப்புச் செலவை அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் உடன்படிக்கைகள் மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுப்பேன். |
| (ஆ) சபையின் கல்உருளை வாடகைக்கு கொடுத்தல் முறைப்பிரகாரம் மேற்கொள்ளப்படாமையால் 2018 ஆண்டிற்கான ரூபா 64,000 தொகை மற்றும் 2019 ஆண்டிற்கான ரூபா 60,000 தொகை என்பன சாரதிகளிடம் அறவிடப்பட வேண்டியிருந்தது. | கல்உருளை வாடகைக்கு கொடுத்தல் முறைப்பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டும். | எதிர்காலத்தில் முறையான வேலைத்திட்டம் ஒன்று தயாரிக்கின்றேன். |

## 3.3 மனித வள முகாமைத்துவம்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
| --- | --- | --- |
| (அ) பதவியணி திட்டத்தின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் காணப்பட்ட 10 வெற்றிடங்களை நிறப்புவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வெற்றிடங்களை நிறப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உள்ளூராட்சித் திணைக்களத்துடன் கலந்துரையாடி, வெற்றிடங்ளை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பிரதியீட்டு ஊழியர்கள் 06 பேருக்கு நாளாந்த சம்பளமாக ரூபா 738,661 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | பிரதியீட்டுப் பதவிகளை முறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உள்ளூராட்சித் திணைக்களத்துடன் கலந்துரையாடி வெற்றிடங்ளை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உள்ளகக் கணக்காய்வு வலுப்படுத்த வேண்டும். | எதிர்காலத்தில் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டு அறிக்கைகள் அனுப்ப நடவடிக்கை எடுப்பேன். |

**4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நிறுவுவதற்கு மீளாய்வாண்டு இறுதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |